# மனம் தேடு!

(599- வது கவியரங்கு)

நாள்:-07-03-2021

கனவுகளைத் தேடும் மனம்;
கற்பனையால் தான் விரியும்!
மனந்தேடும் கனவுகளை,
மருவின்றி நினைவாக்க;
தினந்தோறும் சிந்தையிலே,
தெளிவாகத் திட்டமிடு!
சினமில்லாச் சிந்தையோடு,
செயலாக்கம் காண்பாயே!



மனம்கூறும் கற்பனையில்,
மறுபடியும் தடம் தேடு!
இனம் காணும் இன்னல்களை,
எளிதில் நீ களைந்துவிடு!
தனம் தேடும் வாழ்வென்றே;
தவறாகக் கருதாதே!
தனம் வேண்டும் வாழ்க்கைக்கு,
தடுமாற்றம் அதிலில்லை!

குணமென்னும் குன்றானால்
குவலயமும் போற்றாது!
பணம்தேடும் பந்தியினை;
பார்வையாலே அளந்துவிடு!
மணம் காணும் மங்கையென,
மயக்குறு பார்வை கொண்டால்,
தினமவர்தான் சூழ்ந்துன்னை;
தேரிலே ஏற்றி வைப்பார்!



- கவிவளவன்